**MCOP. No. 148/17, 149/17 & 150/17**

P.W.1 - நந்தகோபி

தேதி: 24.02.2021.

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

16.04.2017 அன்று மதியம் 2.30 மணிக்கு விபத்து நடந்தது. விபத்திற்குள்ளான வாகனம் எனக்கு சொந்தமான வாகனம் என்றால் சரிதான். என்னுடைய வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு இல்லை. காப்பீடு இல்லாமல் வண்டியை ஓட்டிசெல்வது மோட்டார் வாகன விதிமுறைகளுக்கு தவறானது என்று சொன்னால் சரிதான். விபத்து ஏற்படும் போது என் மகனுக்கு 6 வயது. இருசக்கர வாகனத்தில் 3 பேர் பயணம் செய்தது தவறு என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்துக்குள்ளான பகுதியில் மேம்பாலம் உள்ளது என்றால் சரிதான். நான் வாலாஜா செல்லவேண்டும் என்றால் மேம்பாலத்தை கடந்து தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். நான் மேம்பாலத்தில் ரோட்டை கடக்க முயற்சி செய்யும் போது என்னுடைய அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் ஓரமாக தான் நின்றிருந்தேன் என்பதை காண்பிப்பதற்கு வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வரைபடத்தை தாக்கல் செய்திருந்தால் நான் ஓரமாக தான் நின்றிருந்தேன் என்பது தெரியவரும் என்பதால் தான் வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் எனக்கு இடது கால், கை மற்றும் நெற்றியில் காயம் ஏற்பட்டது. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்று சொன்னால் எனக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேன். என் மகனுடைய மருத்துவ செலவு ரூ.46,139/= ஏற்பட்டது என்பதற்கு அதனை வழங்கிய மருத்துவமனை அதிகாரியை விசாரித்தால் தான் தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. நான் தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். எனக்கு மாதம் ரூ.12,500/= சம்பளம் பெறுகிறேன். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. நான் மாதம் ரூ.12,500/= சம்பாதிக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட மருத்துவ செலவு ரூ.1,25,229/= ஏற்பட்டது என்பதற்கு அதனை வழங்கிய மருத்துவமனை அதிகாரியை விசாரித்தால் தான் தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. என் மகனுக்கு ஏற்பட்ட காயங்கள் தற்போது குணமாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்றும் என்னுடைய அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் மட்டும் தலைகவசம் அணிந்திருந்தேன். என் மனைவி மற்றும் மகன் தலைகவசம் அணியவில்லை. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை மிகவும் அதிகம் என்று சொன்னால் சரியல்ல.